பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 08 2026 THURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாட்டுப்பற்றை வலுப்படுத்துவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**2.** தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண கூடுதல் மண்டல அமர்வுகளை அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**3.** பஞ்சாபில் வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

**4.** பங்களாதேஷ் அதிபர் தேர்தலில் ஆளும் பங்களாதேஷ் தேசிய கட்சி சார்பில், அக்கட்சியின் மூத்த தலைவர் திரு **Mirza Fakhrul Islam** போட்டியிட உள்ளார்.

**5.** **21** வயதுக்கு உட்பட்டோருக்கான ஐந்தாவது மற்றும் இறுதி ஹாக்கிப் போட்டியில் இந்தியா — மலேசியாவை வென்றது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாட்டுப்பற்றை வலுப்படுத்துவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கத்தின்கீழ், இன்று தமது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றியபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கோடிக்கணக்கான மக்கள் தேசியக்கொடியை ஏற்றிவருவதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பிற்கு ஏற்ப நாடு முழுவதும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் மக்கள் இயக்கமாக மாறி வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தமது இல்லத்தில் தேசிய கொடியை ஏற்றிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி சார்பில் நாடு முழுவதும் தேசியக்கொடி ஏந்தி பேரணி நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும், கிராமங்களிலும் இந்த பேரணி நடைபெறும் என்று திரு ஜெ பி நட்டா கூறினார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்த இயக்கத்தின்கீழ் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அனைவரும் இல்லங்களில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ், பேரணி நடைபெற்றது.

ஆளுநர் திரு குலாப்சந்த் கட்டாரியா தொடங்கிவைத்த இந்த பேரணியில் ஏராளமான இளைஞர்களும், சிறுவர்களும் தேசியக்கொடி ஏந்தி பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ், படகு பேரணியை அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் தொடங்கிவைத்தார்.

போபால் ஏரியில் நடைபெற்ற இந்த படகு பேரணியில் தேசியக்கொடியை ஏந்தி ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு மோகன் யாதவ், பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்புக்கு ஏற்ப இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி தொடங்கிய இந்த இயக்கம் வரும் 17-ஆம் தேதிவரை நடைபெறும் என்றும், அனைத்து மக்களும் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

குஜராத் முதலமைச்சர் திரு புபேந்தர் பட்டேல், இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ், காந்தி நகரில் உள்ள அவரது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குஜராத் மாநிலத்தில் 70 லட்சம் வீடுகளில் தேசியக்கொடி ஏற்றப்படும் என்று கூறினார்.

அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக எல்லைப்பகுதியில் உள்ள கிராமங்களிலும் தேசியக்கொடி ஏந்தி பேரணி நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

குஜராத் மாநில துணை முதலமைச்சர் திரு **Harsh Sanghavi** ராய்பூரிலிருந்து, அகமதாபாத் வரை தேசியக்கொடி ஏந்தி விழிப்புணர்வு பேரணியை தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கஷ்மீரிலிருந்து, கன்னியாகுமரி வரை அனைத்து இடங்களிலும் இந்த இயக்கம் தேசப்பற்றை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் கத்துவா நகரில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் சார்பில் தேசியக்கொடி ஏந்தி பேரணி நடைபெற்றது.

காவல்துறையினர், பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இதில் கலந்துகொண்டனர்.

தேசியக்கொடியை ஏந்தி நாட்டுப்பற்று பாடல்களை பாடி, கத்துவா விளையாட்டு அரங்கத்தில் இருந்து தொடங்கிய இந்த பேரணி, மாவட்ட காவல்துறை தலைமையகம் வரை நடைபெற்றது.

<<<<<<<>>>>>>>

சுதந்திர தினத்தையொட்டி, உலகப்புகழ் பெற்ற சுற்றுலா மற்றும் புராதன சின்னமான கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம் கண்ணைக்கவரும் வகையில் மூவர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள இந்த கோவில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில்

கோவிலின் முகப்பு, கோபுரம், உள்ளிட்ட இடங்களில் மூவர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*(Voice Byte — ராம்குமார் - 44 Sec. )*

<<<<<<<>>>>>>

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண கூடுதல் மண்டல அமர்வுகளை அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள் **Joymalya, Mohana** ஆகியோர் அடங்கிய அமர்வு, மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் தணிக்கை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது.

நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தேசிய நுகர்வோர் ஆணையத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், இன்று முடிவடைந்தது.

இரு அவைகளின் நடவடிக்கைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>

பஞ்சாபில் வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு பிறகு 20 லட்சத்து 66 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் அக்டோபர் 12-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக உயர்த்துவதற்கான முக்கிய துறைகள் என்ற தலைபைபிலான அறிக்கையை நித்தி ஆயோக் துணைத்தலைவர் திரு அசோக் குமார் Lahiri இன்று வெளியிட்டார்.

உலகளாவிய போட்டிகளை எதிர்கொள்ளும் நிலையில் உள்ள 12 முக்கியத் துறைகள் குறித்து இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய போட்டிகளை எதிர்கொள்ளும் திறன், மதிப்புக்கூட்டுதல், வேலைவாய்ப்பு உருவாக்கம், உலகளாவிய

விநியோகச் சங்கிலுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், உற்பத்தித்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான செயல் திட்டம் ஆகியவை இதில் அடங்கியுள்ளன.

மின்னணுப் பொருட்கள், எஃகு, வாகனம், பாதுகாப்பு தளவாடங்கள், ட்ரோன்கள், ரசாயனங்கள், ஜவுளி, மருந்துப் பொருட்கள் உற்பத்தி, உபகரணங்கள் உள்ளிட்டவை உற்பத்திக்கான முக்கிய துறைகளாக இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<<>>>>>>>

கென்யா நாட்டின் நாடாளுமன்ற தூதுக்குழுவினர் இன்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லாவை புதுதில்லியில் சந்தித்தனர்.

திரு ஓம். பிர்லா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா — கென்யா நாடுகளுக்கு இடையிலான நீண்டகால உறவுகள் குறித்து பகிர்ந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இந்த சந்திப்பு அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வரலாற்று பாரம்பரியம், ஜனநாயக மாண்புகள் உள்ளிட்டவை குறித்து கென்யா குழுவினருடன் தாம் பேசியதாக திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

பங்களாதேஷ் அதிபர் தேர்தலில் ஆளும் பங்களாதேஷ் தேசிய கட்சி சார்பில், அக்கட்சியின் மூத்த தலைவர் திரு **Mirza Fakhrul Islam** போட்டியிட உள்ளார்.

பங்களாதேஷ் அதிபர் தேர்தல் வரும் **20-**ஆம் தேதி நடைபெறவுள்ளது.

அதிபர் தேர்தலில் அந்நாடின் எதிர்க்கட்சியான **Jamaat-e-Islami** கூட்டணி சார்பில், திரு **Oli Ahmad** போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அதிபராக இருந்த திரு முகமத் சஹாபுதீன் கடந்த ஜூலை **24-**ஆம் தேதி தமது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து, அங்கு அதிபர் தேர்தல் நடைபெறுகிறது.

அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவர் திரு **Hafizuddin Ahmad** தற்போது பொறுப்பு அதிபராக பதவி வகித்து வருகிறார்.

கடந்த பிப்ரவரி **12**-ஆம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் பங்களாதேஷ் தேசியக்கட்சி வெற்றிபெற்றுள்ளது.

இதனையடுத்து, அக்கட்சி சார்பில் போட்டியிடும், திரு **Mirza Fakhrul Islam** அதிபர் தேர்தலில் வெற்றிபெற அதிக வாய்ப்புள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

ஒடிஷாவின் வட மாவட்டங்களில் தொடர் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

**Jalaka, Budhabalanga** உள்ளிட்ட ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதனையடுத்து, **Balasore, Mayurbhanj** உள்ளிட்ட மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒடிஷாவின் பல்வேறு மாவட்டங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்க மாநிலத்தின் கடலோரப் பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

**Purelia,** மேற்கு **Medinipur, Burdwan** உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

கேரளம் மாநிலத்தின் கோட்டயம், பத்தனம்திட்டா, இடுக்கி, கன்னூர், வயநாடு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் அடுத்த **24** மணிநேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான ஐந்தாவது மற்றும் இறுதி ஹாக்கிப் போட்டியில் இந்தியா — மலேசியாவை வென்றது.

பெங்களூருவில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா **4-3** என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் இந்தியா வெற்றிபெற்றது.

<<<<<<<**END**>>>>>>